வேல். சாரங்கனின்

# வாழ்க்கை



வைத்திய கலாநிதி வேல் சாரங்கனின்

# வாழ்க்கை

# **வாழ்க்கை** (கவிதைத் தொகுப்பு)


| | | |
|---|---|---|
| ஆசிரியர் | : | வேல் சாரங்கன் |
| பதிப்புரிமை | : | சாரங்கனின் குடும்பத்தினர் |
| வெளியீடு | : | வேல் சாரங்கனின் நண்பர்கள்<br>2004 உயர்தரம் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி. |
| அட்டைப்படம் | : | சி.சஞ்சீவ்ராஜ்<br>மருத்துவபீட மாணவன், யாழ். பல்கலைக்கழகம். |
| முதற் பதிப்பு | : | 2023 ஆனி |
| பிரதிகள் | : | 1000 |
| பக்கங்கள் | : | 74 |
| அச்சுப் பதிப்பு | : | ஜெயஸ்ரீ பிறிண்டேர்ஸ்,<br>இல. 34, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். |
| விலை | : | இலவச வெளியீடு |

# முன்னுரை

நண்பன் சாரங்கன் இன்று எம்மோடு இல்லை. ஆனால் சாரங்கனின் நினைவுகள் எம்மோடு எப்போதும் இருக்கும். சாரங்கன் விட்டுச்சென்ற பணிகளை நாம் தொடர்ந்து முன்னெடுக்கவேண்டும் என்ற எண்ணங்களோடு எமக்குள் தோன்றிய முதல் முயற்சிதான் சாரங்கனால் எழுதப்பட்டு தொகுக்கப்படாத கவிதைகளைத் தொகுத்து சாரங்கனின் நினைவுநாளில் வெளியிடும் பணி. அதனை சாரங்கனோடு 1996 ஆம் ஆண்டிலிருந்து 2004 ஆம் ஆண்டுவரை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் ஒன்றாய் கற்ற - பயணித்த நண்பர்கள் இணைந்து "வாழ்க்கை" எனும் கவிதைத் தொகுப்பாக தொகுத்திருக்கிறோம்.

இது சாரங்கனின் இரண்டாவது கவிதைத் தொகுப்பு. சாரங்கன் தனது முதலாவது கவிதைத் தொகுப்பினை 2009 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் "மொழிபெயர்க்கப்பட்ட மௌனம்" எனும் பெயரில் வெளியிட்டிருந்தார். அப்போது அவர் மருத்துவபீட மூன்றாமாண்டு மாணவர். சாரங்கன் தனது இரண்டாவது கவிதைத் தொகுப்பினை விரைவில் வெளியிடவேண்டும் என எம்மோடு பேசிக்கொள்வார். ஆனால் அவரது இரண்டாவது கவிதைத் தொகுப்பு வெளிவராமலேயே எம்மை விட்டுப் பிரிந்துவிட்டார். சாரங்கனின் கனவினை நிறைவேற்றவேண்டும் என்ற முயற்சிதான் சாரங்களின் 31 ஆவது நினைவுநாளில் சாரங்கனின் நண்பர்கள் எடுத்த இந்த முயற்சி, சாரங்கனின் "வாழ்க்கை" கவிதைத் தொகுப்பு வெளியீடு.

சாரங்கன் எல்லோருக்கும் மிகவும் பிடித்துப்போன ஒருவர். அவர் எழுதும்கவிதைகளும், அவர்பேசும்அரசியலும், அவர்ஆடும்சதுரங்கமும் அவர் பணி செய்யும் மருத்துவமும் என சாரங்கனிடம் பிடித்துப்போகாதது என எமக்கு ஒன்று இருந்ததில்லை. சாரங்கன் சினங்கொண்டு நாம் கண்டதில்லை. ஆனால் அவர் சீற்றங்கொண்டிருக்கிறார். அரசியல் குறித்தும் சமூகம் குறித்தும் அவர்கொண்ட அறச்சீற்றங்களை அவரது கவிதைகளில் கொட்டித் தீர்த்திருக்கிறார். சாரங்கனது கவிதைகள் ஜதார்த்தமானதாக இருந்திருக்கிறன. இந்த ஆண்டின் ஆரம்பத்தில் கிளிநொச்சியின் ஊடகவியலாளர் ஒருவர் மரணித்தபோது சாரங்கன்

இவ்வாறு எழுதுகிறார்.

“இது ஆரம்பம் தான்
என நினைத்தவன்
மூன்று நாட்களில் முடிவாகிப் போகிறான்
முடிவாகிறேன் என முடிவு செய்தவன்
முடியாது போய் மடியாது வாழ்கிறான்....

சாரங்கனின் வாழ்க்கையும் மருத்துவமனையில் அனுமதிக் கப்பட்டு மூன்று நாட்களில் முடிவாகிப்போய்விட்டது.

சாரங்கன் மருத்துவனாக மட்டுமல்ல பெருங்கவிஞனாகவும் இந்த சமூகத்திற்கு தொடர்ந்து பணிசெய்வான் என நாங்கள் காத்திருந்தோம். ஆனால் காலன் நோய் எனும் பிணியால் சாரங்கனின் கனவுகளை மட்டுமல்ல எங்கள் நம்பிக்கைகளையும் சிதைத்துவிட்டான்.

மௌனங்களை மொழிபெயர்த்தவனின் தொகுக்கப்படாத கவிதைகளைத் தொகுத்து “வாழ்க்கை” எனும் கவிதைத் தொகுப்பாக வாழ்க்கையை வெளியிட்டுவைக்கிறோம் நண்பன் சாரங்கனின் இப்படைப்பிலக்கியம் வெளிவர அனுமதிதந்துதவிய சாரங்கனின் குடும்பத்தினருக்கும், இத்தொகுப்பு வெளிவர எமக்கு வழிகாட்டியாய் இருந்து உதவிய எழுத்தாளர் ஐ.சாந்தன் அவர்களுக்கும் அட்டைப்படம் தந்துதவிய யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீட மூன்றம் அணி மாணவன் சி.சஞ்சீவ்ராஜ்சிற்கும் இக் கவிதைத் தொகுப்பு வெளிவர அனைத்து வழிகளிலும் உதவிகள் புரிந்த அனைவருக்கும் நன்றிகூறுவதோடு இந்த நூலை சிறப்புற வடிவமைத்துப் பதிப்பித்துத்தந்த ஜெயசிறி அச்சகத்தினருக்கும் எமது நன்றிகள்.

**நண்பர்கள்**
**2004 உயர்தரம்**
**யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.**
24.06.2023

# அணிந்துரை

எமது மகன் சாரங்கன் நோய்வாய்ப்பட்டு அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு கடந்த 25.05.2023 அன்று இறைவனடி சேர்ந்தார். அவரின் மறைவுச் செய்தி கேட்டு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி க.பொ.த. உ/த 2004 நண்பர்கள் வேண்டிய அனைத்து உதவிகளையும் செய்திருந்தார்கள். சாரங்கனைப் பற்றி நாமறிந்த குணாதிசயங்கள் சில அறியாதவை பல. அவரின் திறமைகள் பற்றியும் நாமறிந்தவை சில. அறியாதவை பல. அவரின் குணாதியங்கள் திறமைகள் பற்றி அவர் கடமையாற்றிய வைத்திய நிபுணர்கள் மற்றும் சக நட்பு வைத்தியர்கள் ஊடாகவே அறிந்து கொண்டோம்.

அவர் தனக்காக வாழாது மக்களுக்காகவும், தான் பிறந்த நாட்டுக்காகவும் தன்னலமற்ற சேவையாற்றி வாழ்ந்து கொண்டிருந்தார் என்பதை அன்னாரின் கவிதை வரிகள் ஊடாக அறியக்கூடியதாக உள்ளது.

அவரின் திறமைகள், தேசப்பற்று, மக்கள் சேவை இவற்றை உள்ளடக்கி அவரால் வரையப்பட்ட கவிதைகளை ஒன்று சேர்த்து தொகுத்து உ/த 2004 நண்பர்கள் யாவரும் “வாழ்க்கை” என்ற தலைப்பில் வெளியிடுவது கண்டு அகமகிழ்வதோடு “வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படுவர்” என்பதனை நாம் பூரணமாக நம்புகிறோம்.

இக்கவிதைத் தொகுப்பானது அன்னாரின் வாழ்க்கை முறையை தேசப்பற்றை என்றென்றும் மக்கள் மனங்களில் நினைவுகூர்ந்து கொண்டேயிருக்கும்.

இங்ஙகம்
**குடும்பத்தினர்.**

# முள்ளிவாய்க்கால் கடற்கரை

வெறும்கையாகிப்போன

வெறுமைப்பொழுதுகள்வரை

விஞ்சி இருந்திருக்கிறது நம்பிக்கை ....

கரை இவ்வளவு கதைபேசினால்

கடல் எவ்வளவு பேசும்?

18.05.2023

# நெஞ்சுரம்

சுமந்து வந்தவனை
புதைத்துக்கொண்டது மணல்
புதைக்கப்புதைக்க
முரண்டு வென்றது சுமை !
நினைவுகளும் நெஞ்சுரமும் போல !!

18.05.2023

# வம்சத்தின் நாடு கடத்தல் !

அவர்கள்
சேதுவில் ராமர் தடங்கள் பற்றி
விவாதித்துக்கொண்டிருந்தபோது,
இலங்காபுரியில்
பல்லாயிரம் ஆண்டுகளுக்கு பிறகு
பழிவாங்கப்பட்டான் ஹனுமான் ...
வம்சத்தின் நாடுகடத்தல் !

# ஆதிசிவன்

விடம்கொண்ட கண்டனுக்கு

எத்தனை நாள் இனும் வேண்டும்?

வெடுக்குநாறி மலையேறி

விட்டம் தறித்தவனின்

கொடுக்கவிழ்த்துத் துடுக்கடக்க ...?

# வள்ளுவன்

நாற்சந்திக்கு வந்த
வள்ளுவன் மீது
நிகழ்த்தப்பட்டன,
முச்சூடுகள் ....
வெயில்,
வெண்குறி,
விமர்சனங்கள் !

# பெருந்தொற்று

மற்றோனை, எதிரில் மறிப்போனை, –கூடக்
கற்றோனைக் கண்டும் களியர்
உற்றோனைக் கூட
உடல் அண்டிடாமல்
தொற்றோன் எனவஞ்சி தொலைவாய்
முற்றாய் நகர்ந்து
முகமூடியோடு
முழுதாய் மறைந்து
விரைவாய் ...
பற்றோ மறுத்து
பாசம் விலக்கும் பெருநோயைக்கொல்லு பரமா !

# காதல்

அவன்
காதலித்துக்கொண்டிருந்தான்....
நிலாக்காட்டி சோறூட்டும்
அவளின்
பேரக்குழந்தையின் கையில்
இதயவடிவ
மிட்டாயொன்றைக்
கொடுத்தபடி....!
தொலைத்த உணர்வின்றி
துளிர்த்துக்கொண்டேயிருந்தது,
காமம் களைந்த காதல் !

# வாழ்க்கை

'இது ஆரம்பம் தான்'
என நினைத்தவன்
மூன்று நாள்களிலே முடிவாகிப்போகிறான் ....
முடிவாகிறேன் என
முடிவு செய்தவன்
முடியாது போய்
மடியாது வாழ்கிறான் .....
மொத்தத்தில்
முடிவும் முதலும்
தொடர்வும்
அறியா வாழ்க்கை
ஒரு வாடகை வீடு தான் ...
முடிந்தால் வர்ணம் செய்
இல்லையேல் சேதமின்றி
வாழ்ந்துவிட்டு போ....!

(31.01.2023 அன்று ரயில் விபத்தில் உயிரிழந்த கிளிநொச்சியைச் சேர்ந்த இளம் ஊடகவியலாளர் நிபோஜனுக்காய் எழுதிய கவிதை )

# சனமடங்கிய இரவு

சில்லென்ற குளிர்

சிங்காரத்தூவல்

சீதளக்காற்று

சுடு தேநீர்

சனமடங்கிய இரவு

சளைக்காத கனவு !

# காவிய நாயகர்

காற்றிடை தூவிய கந்தக வாசனை
சாற்றிய செய்தி என்ன.... – மழை
ஊற்றி அடங்கா உறங்கா விழிகளை
தேற்றிட வார்த்தை என்ன....
கடலிடை தாவிய குருவிகளே – அவர்
கரைதொடா கதைகளை சொல்லீரோ....
படகதன்விசையினில் பகலவ ஒளியுடன்
புனல் அனல் ஆனதை சொல்லீரோ .....
புழுதி கிளர்ந்திடப் போயினர் எங்கோ...
புகை வந்த திசையினை பாருங்கள்
அழுது வடிகின்ற கண்களைத்துடைத்து
ஆறுதல் சொல்லிட வாருங்கள்.....
வானகம் அளந்த பறவைகளே – தென்
வானை அதிர்த்திய குருவிகளே....
கானகம் எங்கும் காலனை வென்றவர்
காவியமானதை சொல்லீரோ......

# அக்கினிக் குஞ்சுகள்

கால்கள் இழந்த
கணமொன்றில்
நடை பயின்றுகொண்டோம்.....
கரங்கள் நறுக்கப்பட்டபோதும்
புயங்களில்
கருவி சுமந்தோம் ....
வாய்களை மூடி
பேசச்சொன்னபோது
பேனாக்களின் மூடி திறந்தோம்....
சிறகுகளில்
தீ கனன்றபோதும்
உயரப்பரந்து மழை முகிலில்
தீ கரைத்தோம்....
பேனாக்களை அவர்கள்
துவம்சித்தபோது
சிறுதீபத்தில்
எங்கள் சிந்தை கலந்தோம் ...
அழவும்  தொழவும்
அனுமதி மறுக்கப்பட்டபோது
நீறு பூத்த வெந்தணலாய்
காத்துக்கிடப்போம்...,
உள்ளே கனன்று உயிர்ப்போடு ...!
சிறுதீப்பொறிகொண்டு
வருவான்
இன்று நினைக்கப்படுபவனின்
பேரன்.... !

# ‘‘பீட்சாக்கு’’ மண் இழந்த பெருமான்கள்

முன்னோர் பொழுதில்
போர் தொடங்கியிருக்கவில்லை....
எங்கள் தட்டுகளில்
பிட்டும்
புழுக்கொடியலும்
பனாட்டும்
கொட்டிக்கிடந்தன .....

தலைநகர் பதவிகளில்
தமிழர் தலைகளே
அதிகம் தட்டுப்பட்டன .....

பின்னோர் பொழுதில்,
தம்மை ‘மீட்பர்களாக்கி’
போரை முடித்தனர் சிலர்......

பெட்டி “பீஸ்ஸாவும்”
குட்டி “பேர்கரும்”
பின்புறமாய் கஞ்சா
கெரோயினும் ஊட்டப்பட்டன......

அலுவலகங்களை அவர்கள் நிறைக்க
வைத்தியசாலை கட்டில்களை
நாங்கள் நிறைத்தோம் ....!!

இன்றொரு பொழுதில்,
பிட்டும் வடையும் உண்டவருக்கு
“பீஸ்ஸா” உண்ணும் வரம் கொடுத்ததாய்
பேசிக்கொண்டனர் ‘மீட்பர்கள்’...
ஆண்ட மொழியின் ஆழம் மறந்து!

# நம்பிக்கை

இரும்புகள் ஆயிரம்
இருப்பினும் ,
பொழுதுகளில்
இருப்பைக்
கொடுப்பன
நூல் இழைகள்....!

# நியதிகள்

கைகள் இல்லாதவள்
கால்களால் இசைக்கிறாள்
ஹார்மோனியம் ...

அவயம் இழந்த குழந்தை
உதட்டினால் தீட்டிற்று
ஓவியம் ....

கால்பெருவிரல் பிடித்த
பேனாவில் எழுதி
பல்கலைக்கழகம்
போகிறான் மாணவன் ...

ஒற்றைக்காலில்
உருத்திர தாண்டவம்
ஆடியவனை
வியந்தது உலகம் ...

சக்கர நாற்காலியில் கூட
பால்வீதியில்
பயணிக்க முடிந்தது
ஸ்டீபன் ஹவ்கிங் கால் ...

விழியற்றவளின்
சங்கீதத்தில்
வலியற்றுப்போயிற்று
மனசு ...

இயற்கையோ இறைவனோ
ஏதோ ஒன்றை கொடுக்காமல்
இன்னொன்றை பறிப்பதில்லை ....

நமக்குத்தான்
தொலைப்பது தெரிகிறது
இருப்பது புரிவதில்லை.....

# தியாக தீபம்

புரட்டாதி மாதத்து
புனித வாரத்தின்
ஆரம்பம் ஒவ்வொன்றிலும்
தினசரி பத்திரிகைகளின்
நடுப்பகுதிக்குள்
இலவசமாக ஒரு
புகைப்படம் .....
கடந்த ஆண்டின்
நாட்காட்டி
மட்டையில்
வேலுடனிருக்கும்
முருகனுக்கு
மேலாக
அவன் ஒட்டப்படுவான் ....
வெள்ளை போர்வை போர்த்திய
நாற்காலி
ஒன்றன் மேல்
இயற்கைப்பூக்களின்
குவியலுக்குள்ளும்
மினுங்கும்
சருகு மாலைகளுடனும்
ஒரு சிறிய ஆலயம்
முன் மாடத்தை அலங்கரிக்கும் ..
96 க்கு முன்
நினைவில்
உள்ள பால்ய
ஆண்டுகள் ஒவ்வொன்றும்
தவறவிடாத
சம்பிரதாயம்.... ,
போதித்து போயிற்று
பிறர்க்காய் அர்ப்பணித்தவன்
கடவுள் எனும்
அதிமனித விழுமியத்தை.... !

# தொடுதிரைக்குள் தொலைதல்

அவனைக்கண்ட
முதல் இளைய தலைமுறை
நாம் தான்...
இரண்டாயிரங்களின் ஆரம்ப ஆண்டுகளில்
சற்று பெரிதாய்
'வாக்கி டாக்கி போல
நம் கைகளில் அவன்....

சட்டைப்பையில் நுழைக்க
சற்று சிரமமாக இருப்பினும்
கையில் சுமந்து நடக்கையில்
ஒரு இறுமாப்பு....!
சீக்கிரமே சிறுத்துப்போனான்
கைக்குள்ளும் பைக்குள்ளும்
களவாய் ஒழியும் திணிவோடு,
கையாகவே மாறிப்போனான்....!

சிறு செய்திகளும் ,
அழைப்பும் மட்டுமே
முடிந்தது அவனுக்கு....
இருந்தும்
தேசங்களை அருகாக்கியும்

காகிதக்காதலை
கடிதாக்கியும்
அவன் செய்த மாற்றங்களில்
பூரித்துப்போனோம்....

வீட்டுக்கொருவனென வந்தவன்
ஆளுக்கொருவன் ஆகிப்போனான்...
உணவில் போலவே கடைசியாக
அம்மாவுக்கும் ஓர் கைப்பேசி....
வடிவங்கள் மாறி
உருவங்கள் மாறி
உள்ளடக்கங்களும் மாறிப்போயின ,
வயசுக்கும் வல்லமைக்கும் சான்றுகள் போல.... !
இருப்பினும் வரம்புகளோடு....!
தொழினுட்ப அரக்கன் வெகுவாய்
கொழுத்துப்போனான் ...

எம் கண் முன்னே...
தொடு திரை
என்ற வேடத்தோடு வீடு வந்தான்.... !
பிள்ளையின்
உணவும் உறக்கமும் அவன் பொறுப்பாகிற்று.....!
வாலைகள்
கால்கள் வலிக்க தேடிய காதல்
வலியின்றி கூடிற்று.....!

பல்லாண்டுகளாய்
தொலைவாகிப்போன
பள்ளித்தோழியின்
நட்புக்கோரலும் ,
தொலைவான பழைய
காதலனின் தேடலும்

சுகமாக்கிற்று வாழ்வை....!
ஒற்றை விரல் சொடுக்கில்
ஒன்பது பிள்ளைக்கும்
போயிற்று

பாட்டி இறந்த செய்தி....!
நேற்று வந்த ஜாதக குறிப்பில்
மாப்பிள்ளையின் பெயர் பேசக்கேட்டு
மறுகணமே
அவன் புகைப்படம்
கண்டு கொண்டாள் பெண்....!
'புரோக்கர்'களின் பிழைப்பில்
போடப்பட்டது மண்....

'கொரானா' எனும் பிள்ளைகளின் தெய்வம்
அள்ளிக்கொடுத்தது பள்ளி லீவு....!
பிள்ளைகள் கைகளில்
பெருமையாக கொடுக்கப்பட்டான் அவன் .....
2022– யாழ்ப்பாணம்....
தேசங்களை இணைத்து
வைத்தவன்
தயங்காமல் பிரித்தான்
குடும்பங்களை...

"பேசிய பிள்ளை
பேசவில்லை இப்போது ....,
தாய் முகம் பார்க்கவும் மறுக்கிறது"
என்கிறார் தந்தை... .
'ஆட்டிசம்' என்கிறார் வைத்தியர்...
'கண்களை வெட்டுகிறான்
சற்று பாருங்கள்' என்கிறாள் தாய் ...
'அதிகம் " போன" கொடுத்தீர்களா?
என்கிறார் கண் வைத்தியர் ....

பள்ளி போன சிறுமியை
காணவில்லை’ என்று அழுகிறாள் தாய்...
விலங்கிடப்பட்ட இளைஞனுடன் அழைத்து
வருகிறது போலீஸ் ....

‘சிறுதிற்கும்
கோப்படுகிறான்’ என்கிறாள் தாய்...
“பப்ஜி”யும் “பிரீ பய”றும் விளையாட
தாய் மறுத்தால்
கொல்வேன் அவளை என்கிறான் மகன் ...!

காதலின் போர்வையில் ,
போதையின் கட்டளையில்
ஏமாற்றப்பட்டவளின்
நிர்வாணத்தை இடைப்பாட
வேளையில் ரசித்துக்கொண்டன
மீசை அரும்பாத
பயிர்கள்... !

பெண்கள் கல்லூரி ஒன்றின்
கைவிடப்பட்ட கட்டடமொன்றுள்
கைபேசியோடு
மறைந்துபோனது
ஒரு பெண் ஜோடி....!

# நிலாவும் நினைவுகளும்...

பதினைந்து ஆண்டுகளுக்கு
முந்திய ஒரு அதிகாலைப்பொழுது....
ஊரடங்கும் சட்டம் தளர்த்தப்படாத ஒரு
அகால வேளையில் ...
அந்த இல்லத்தின் கதவுகள்
தட்டப்படுகின்றன...
பின்பு வலிந்து திறக்கப்படுகின்றன ...
சில நேர சல்லடைகளுக்கு பிறகு ...
“கொஞ்சம் தனிய கதைக்கவேணும்....”
கதைக்கத்தொடங்கின உதடுகள்...
கதைத்து முடித்தது
உயிர் விலையறியா
உலோகத்தோட்டா ....
ஒவ்வோர் ஆண்டும்
இந்த தேதியில்
நண்பன் வீடு செல்லும்
நமக்கு
மீள மீள கதைசொல்லி
மனதின் கனதி
குறைத்தது தாய்மை....

பதினான்கு ஆண்டுகளின்
அதே சங்கதி
பதினைந்தாம்
ஆண்டில் மாறி போயிருந்தது....
மகனின் புகைப்படமருகே
புன்
சிரிப்போடு தாய்
புகைப்படமாக ....
பதினைந்து வருடத்து
புதினங்களை மகனுக்கு
சொல்லிக்கொள்வதாய்
எண்ணிக்கொண்டது என்
மனசு....
வீரங்களையும் தியாகங்களையும்
விதைத்துப்போகும்
தாய்மை ஒரு தொடர்
கதை தான்....
பயணங்களில்
நம்மோடு
கூடவே
பயணிக்கும்
நிலவாய்
நிலாவும் நினைவுகளும்...

(01.08.2007 அன்று படுகொலை செய்யப்பட்ட ஊடவியலாளன், மாணவ செயற்பாட்டாளன் நண்பன் சகாதேவன் நிலக்சனின் 15 ஆவது ஆண்டு நினைவாக எழுதியது)

# வேற்றுமைரா இரைப்பைகளின் மொழி

வெடியோசைகளோடு
கண் விழிப்பதும்
உயரப்பறக்கும்
உலங்கு ஊர்திகளுக்கு
தலை மறைப்பதும்
இரும்புக்குழல்கள்
நெஞ்சை வெறிக்க
நெடு நிரைகளில்
நின்று சோர்வதும்
நாசிநிறைத்த கந்தகப்புகையும்
நாறித்தீர்க்கும்
குருதி நெடியும்
இன்னும்
எத்தனையோ அவலங்களும் பழகியலுத்த
மனங்கள் எமது .....
இன்று உங்களை நசுக்க
முனையும் இதே இயந்திரத்தின்
சக்கரங்களுக்கு அடியில் தான்
எம் வாழ்நாளே  நகர்ந்துளது ....
இன்று உங்களோடு நாங்கள் இருக்கிறோம்...
அன்று எங்களோடு நீங்கள் இருக்கவில்லை....!
எரிபொருளும் வாயுவும்
நெற்சோறும்
சற்று சம்பள உயர்வும்
கிட்டும் பொழுதொன்றில்
எங்கள் கைகளை நீங்கள் உதறிவிடுவீர்கள்
நாமறிவோம் ....
இருந்தும் இன்று உங்கள்
கைகளை பற்றிக்கொள்கிறோம்
ஏனெனில்...
கருப்பை போலல்ல
இரைப்பை சோதரா ...
அது பேதமறியாதது....

# கனவை மறைக்கும் பூச்சுக்கள்

தேன்நுகர் வண்டென
பூவிதழ் காமுறும்
வாலை வயதினிலே,
நம் தேசம் எனப்பெரும்
கொள்கை சுமந்து தீயை உமிழ்ந்தவரே......

காலைகள் எத்தனை
கடந்தோம் ?
உங்கள் கனவினில்
நாங்களும் நடந்தோம்.....
விடியாத காலைக்கு
விடிவென்று பெயரிட்டு வெடியோசை கலைத்து
நாம் மகிழ்ந்தோம்....!

கானகத்திருளினுள் கால்கள் கடுத்திட
நீங்கள் நடந்தீர்கள்.......
அந்த காளை வயதினில் – தூக்கம்
உணவொறுத் தேக்கம் சுமந்தீர்கள்.....!

உங்கள் கனவின்
விலையது அறியா
காலத்தில் நிற்கின்றோம்.....
வெறும் கட்டை விரல் நகப்பூச்சினில்
உங்கள் கனவை மறைக்கின்றோம் ..... !

# சோபனப் பொருள்களின் சொந்தக்காரி

நம்பிக்கை
இழந்துகொண்டிருக்கும்
இந்த தீவின்
எங்கோ ஒரு ஊரில்
தன் பிள்ளைக்கு வரலாறு
புகட்டிக்கொண்டிருக்கக்கூடும்
அவள்...
இல்லையேல்
இதே கடல் மண்ணின் அடியில்
என்புக்கூடாக உறங்கிக்கொண்டிருக்கக்கூடும் ....!
யானறியேன்....

எனக்கு புரிந்தது
ஒன்றுமட்டும் தான்
உயிர் சுமந்து ஒழிந்த
அந்த இறுதி நாள்களிலும்
அவள் மனக்கூட்டில்
கூடவே பயணித்த
அந்த நம்பிக்கை.....

# இனிமை

வயிற்றில் சுமந்தபோதும்
கனக்கவில்லை
மும்மூன்று திங்கள்...
கோப்புகளாய் சுமந்தபோதும்
கனக்கவில்லை
முத்தசாப்தங்கள் ...
முதுமையிலும் இனித்தது
மீள் பிரசவம் ...!

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் இருந்து பேரறிவாளன் விடுதலை செய்யப்பட்ட போது எழுதியது

# முள்ளிவாய்க்கால்

என் எஜமானியின்
பாதங்கள் பேசிக்கொண்டன...,
இந்த மண்ணின் மீதான
தம் தீராக்காதலை....!

அவள் தோளில்
சுமையுடன்
ஓடிக்கொண்டிருந்த
ஒரு உயிர்வலிப்போதில்
என் செவி அறுந்து போயிற்று ..!
ஆதலால்
குற்றுயிராக அவள்
வன்புணரப்பட்ட
வலிக்குரல் எட்டவில்லை எனக்கு ...
எட்டியிருந்தால் நானே எழுந்து பொருதியிருப்பேன் ,
அந்த மிருகத்தின் முகத்தில் ....!

அவள் நேசித்தமண்ணில்
ஒட்டிக்கொண்ட என்னை
எந்தப்பெரு அலையாலும்
தட்டிப்போக முடியவில்லை.....
ஒரு வீரப் பெண்யுகத்தின்
வாழும் சாட்சியாய்
விட்டுப்போனது கடல் ..!

16.05.2022
(முள்ளிவாய்க்கால்)

# தசாப்தமும் தறா தலை விதியும்

அவிழ்த்து உயர்த்திய
வெண்ணிற வேட்டியில் தெறித்துப்பறந்தது
செந்நிறக்குருதி .....!

இறுதி வரைக்கும்
பணியா மறத்தின்
இறந்த மார்பில்
சுடுகலன் வைக்கையில்
இறந்தே போனது
போரியல் தர்மம்....!

“நான் அவள் இல்லை
விடுங்கள்” என்கிறாள்..:
ஆடை இழந்து
அலங்கோலமாக
அடுத்த காட்சியில்

மரித்துக்கிடக்கிறாள்....!

பாலகன் கைகளில்
பலகாரம் கொடுத்து
பயம் களைந்த பின்
கொல்வது அறமோ ?!

பயங்கரவாதியின்
தப்பிய குழந்தையை
முறைப்படி மீட்பது
மகத்துவம் இல்லையே ....

மனிதநேயத்தின்
அடிப்படை கூட
மகத்துவமானதோ....
அமானிடம் செய்வதால்...?

கைகள் உயர்த்தி
நடந்தவரெல்லாம்
காணாதோர் ஆனதன்
மர்மம் துலங்க
எத்தனை ஆண்டுகள்
இன்னும் வேண்டும் ?

போரினால் பின்னோக்கி
போனது இத்தீவெனில் ,
பத்தாண்டு வளர்ச்சியின்
படி நிலை எங்கே?

ஆண்டுகள் பத்து
கடந்திட்ட போதும்
நல்லாட்சி ஏதும் தந்திடவில்லை
நம்மாட்சி பேரம் பேசவுமில்லை!

போரினால் இல்லை
எம் போக்கினால்
என்று
புரிந்திடாவிடில் வரும்
அடுத்த பத்தாண்டில்
சோமாலியாவும் எதியோப்பியாவும்
கடன் தரக்கூடும்....
நமக்கென்ன வெக்கம்?

# சபிக்கப்பட்ட தீவு -2022

மிக உறுதியாகப்
படிந்து போயிற்று ...,
வைகாசி 18 இன்
குருதிக்கறை ...!

வெற்றிமுரசுகளாலும்
கார்பெட் தெருக்களாலும்
தெளிக்கப்பட்ட
அபிவிருத்திகளாலும்
துடைக்க துடைக்க
இன்னும் துலங்கிற்று ...

கொடுங்கிருமியின்
கடூரத்தில்
பல்லாயிரம் தடவைகள்

கழுவப்பட்ட
கைகளிலும் மறைந்து
தொலையாமல்
மிகுந்தே போனது....

ஞான மந்திரங்களின்
புகையில் சிக்கியும்
தேரவாதத்தின்
திரைகளினூடும்
இன்னும் இன்னும்
உறுதி காட்டிற்று.....

ஈற்றில் ,
தொலையாத
சாபத்தின்
நச்சரிப்பாய்
காலிமுகத்தில்
அவிழ்ந்து போன
அரைத்துண்டை
இழுத்துப்பிடித்த படி
நெற்றி நிமிர்கையில்
சுந்தரத்தீவு
கைமாறிப்போனது
ஒரு மந்திரக்காரனிடமிருந்து
தந்திரக்காரனுக்கு....!

# விலைவாசியோடு ஒரு வைகாசி

வியர்த்த மேனியில்
வீசும் மென்காற்றின்
அதீத சுகமும்..

மணிக்கொருமுறை
தாகம் காட்டும்
நாவும்
செவ்விளநீர் , மோர் ,
தேசிநீர் , பழச்சாறு
எவ்வளவேனும்
உள்ளிழுக்கும்
அதிசய உடலும் ...

ஊர்க்காட்டு மரம்காய்க்கும்
ஈச்சம் பழ உருசியும்....

சொட்டு நீரானாலும்
நா சொட்ட வைக்கும்
பனம் நுங்கும் ...

சோழக காதலியின்
வரவுக்காய் காத்துக்கிடக்கும்
காண்டாவனக் கனலின்
தகிப்பும் ...

காக்கைகளின் உழைப்பை
சுரண்டும் கருங்குயிலின்
உல்லாசக்கூவலும்...

பொட்டல் வெளிகளில்
பட்டத்தோடு பறந்து
வானளக்கும்
பிஞ்சு மனங்களும்...

பறக்கும் உடைக்கு
ஒருகை கொடுத்து
சைக்கிள் உழக்கும்
கன்னிகளும் ...

வெய்யோன் வெஞ்சினம்
தணிக்கும்
வைகாசிப் பொங்கல்களும்

வெள்ளரசு மரங்களிலும்
வீதிச்சந்துகளிலும்
வெளிச்சம் காட்டி,
நிலவை நிகர்க்க
திணறும் வெசாக்
கூடுகளும்....

வீதிக்கு வீதி
புதிதாய்
நிறம் காட்டும்
குளிர்பானக்கடைகளும் ....

எல்லாமுமாய்
இத்துணை
வெயிலிலும்
இனிக்கிறது
வைகாசி...

எத்தனையோ
நினைவுகளை
மீளக்கிளறியபடி
மெல்ல இனி வீசும்
சோழகம்....

என்தேசத்தின்
ஒவ்வொரு மாதமும்
ஒவ்வொரு அழகு...
ரசிக்கும் மனதுக்கு
வெயிலும் அழகு...!

விலைவாசியோடும்
இனிக்கிறது வைகாசி....!

# தன்வினையும்
# நியூட்டனின் மூன்றாம் விதியும்

ஒருகாலத்தில்
இலங்கை போல வளர
ஆசையுற்றது சிங்கப்பூர் ....

சிலதசாப்தங்களில்
சிங்கப்பூர் ஆக்குவேன் இலங்கையை என்பது
தேர்தல் வாக்குறுதியாகிற்று....

அது பழைய கதை...
இப்போதெல்லாம் நாம்
கொம்புத்தேன் மீது
மையல் உறுவதில்லை...
ஆனால் நாங்கள் முடவர்களும் இல்லை....!

எங்களை முட்டாள்கள்
எனவும் சொல்லிவிடாதீர்...

மூன்று தசாப்தமாய்
மூண்ட தீயை
முழுதாய் அணைத்தவர்கள்....

எங்கள் வல்லமைக்கும்
தகுதிக்கும்
அப்பாற்பட்ட சாதனை
அது ...!

வல்லரசுகள் போலல்லவா
'சல்லி' அள்ளி அள்ளி இறைத்தோம்
சும்மாவா வரும் தம்பீ
பல்குழலும் பீரங்கியும்
மிக்கும் கிபிரும்
மிடுக்கான சொனிக்குகளும்
எப்பனும் அசர நொடியின்றி
வெடிக்கிழப்ப
கொப்பரோ சேர்த்து வச்சார் காசு... ?

பறந்த புகையின் துகள்
ஒவ்வொன்றும் டொலர்கள்
என உணர எமக்கு பதின்மூன்று ஆண்டாச்சு .....

இருந்தாலும் இதையொன்றும் வெளியால கதையாதை....

கோதாரி போன கொரோனா
தான் கெடுத்ததென
கூசாம சொல்லு ...!

சிங்களவன் –எங்களவன் ,
செத்தாலும் பிழை சொல்லான்...
யுத்தத்தை முடிச்ச வீரத்தை
குறை சொல்லான்...
தன்மானம் உள்ள
தமிழன் யார் உது கதைக்க ?

மருந்தேனும் கொடுக்க
'மணி' இல்லை எங்களிட்டை...

இருந்தாலும் இதுக்கு
நாங்க பொறுப்பில்லை..
போருக்குப் பிறகும்
கடன்பட்டு பட்டுடுத்தி
மினுக்கித்திரிந்த
மிதமான அழகிகள் நாம்....

விரலுக்கே ஏற்ற வீக்கமென
யார் சொன்ன...?
எங்கள் விரல்கள் யானைக்கால் போலாச்சே ....
'லசிக்ஸ்' அடிச்சது போருமில்லை
பகட்டுமில்லை ...
கொரோனாதான் என்று
கோடிட்டு சொல்லோணும்....!

'எக்கணமி'த் திட்டமில்லை
ஏற்றுமதி வளர்க்கவில்லை
எமக்கு மதி போதவில்லை
என்றுரைக்கும் எதிர்க்கட்சி....!

குரைக்கிற நாய் குரைக்கட்டும்...
சட்டைப்பை கவனம்
கொட்டாம இருக்க குத்திவைப்பம்
ரெண்டூசி ...

கனகாலம் காலாட்ட
காணுமோ தெரியேல்லை...
இப்பவே டொலரா மாத்திவைப்பம் ...
அமெரிக்க விசாவும் அடிச்சு வச்சா நல்லம் தான்...

# மறுயுகத்துக் காதல்

வெல்வது தான் காதல் என
வேதம் இல்லை
சொல்லாத காதல் எனப்
பேதம் இல்லை !
கல்லறையே கன காதல்
எல்லை என்று,
துல்லியமாய் சொல்வதிலும்
உண்மை இல்லை...!

சேராத காதல் தம்
நெஞ்சை முட்ட ,
சேருமிடம் ஏதெனவே
திகைத்த காலை
வாராதோ விடியலென
வலிய தோள்கள்
வசந்தத்தை நோக்கி
நகர்தல் கண்டு,
தீராத வேட்கையெனும்
தீயின் திசையில்
சென்றிவரும் சேர்ந்திடவே
காதல் என்னும்
மானிடத்து விதி மேலும்
மருவி மேவி ...
மாவீரனாக்கியது
காதல் வாழ்க!!

# குரு வணக்கம் னும் மகத்துவம்

எண்ணியாங்கு எமை
இலங்கிட வைத்த
புண்ணியார் புகழ்
பாடுவோம்...

ஏற்றமே அது
இம்மி தான் எனிலும் ஏணியானவரை
வாழ்த்துவோம்...

கண்ணியம் ,பொறை ,
கடமையோடந்த
கல்வியை அவர்
ஊட்டினார்..:
கவிதையால் பெரு
மாலை சூடினும்
கழிந்திடாக்கடன்
காட்டினார்.....

வெண்ணிறத்துகள்
வீசி நாசியில்
வீம்பு செய்கிற போதிலும்
மண்ணிலே நம் உயர்வு
ஒன்றையே மனதில் வைத்தவர்
வாழ்கவே.....

தண்மைசேர்—பொன்
வார்த்தையால் எமை
தன்வழிதனில்
மாற்றியே
எண்ணோடு எழுத்தியம்பிய—எம் இறைவனார்கள்
நீர் வாழ்கவே.....

காலம் போற்றிடும்
காவியங்களாய்
நீள வாழ்ந்திடும்
குருத்துவம்.......

காலன் தன் கடன்
செய்யும் நாள்வரை
குரு வணக்கம் நம்
மகத்துவம்.....!!

என் ஆசிரியர்களுக்குச் சமர்ப்பிக்கின்றேன்.

# சூரியக்குளிர்

பால் வீதியின் ஒளிப்பிரவாகம்
அச்சில் அசையும் கோள்கள் ....

தகிக்கும் சூரியன்....

பன்னீர் தெளிக்கும் நிலா....
பரபரப்புகளூடே பொறுமைபூத்துக்கிடக்கும்
பூமி... ,
படைப்பின் நெடு நடையில்.....!

ஜீவிதத்தின் மீதான
கேள்விக்குறியோடு
புதிராகவே தொடரும்
செவ்வாய்....
சிதறிக்கிடக்கும் தாரகைகளாய்.....,
சுழலும் கோள்களாய்.....,
மின்மினிக்கோலங்கள்......

யாதொன்றும்
தீண்டல்களற்ற பெரு வெளி.....
அமைதி பூத்துக்கிடக்கிறது....
நேர் கோட்டில் சந்திக்கையில்
தெறிக்கும் நிசப்த நெருடல்கள்
தவிர்த்து.....
சலசலப்புகளை சந்திப்பதில்லை
அண்டப்பெருவெளி.....

சூரியன் குளிர்வதில்லை....

நினைவுகள் மீளும் பெரு வெளியில்
ஒரு பொடி நடை.....

அதே இரண்டு கால்கள் ......!!
2019

# தலைமுறைகள்

மானிடம் மரித்த பூமியில்
சீவித்திருக்கிறோம்.....
கத்தியின் கூர்நுனியில்
நகரும் பாதங்கள் போல் வாழ்வு....

அந்தகாரத்து திகில் நாள்களில்
அன்னையர்கள் நம் பௌதீகத்தொடர்ப்பறுத்த போது
ஆரத்தி எடுத்துக்கொண்டன
வெடியொலிகளும் கந்தக தூபமும்......

தசாப்தங்கள் பலகடந்த போர் நிலமே வாழ்புலம் ஆகி–
ப்போனது
பல தலைமுறைகளுக்கு......

போரின் மணமறியா
புதுத்தலைமுறைக்கு
வாளும் வன்முறையும் சொல்லிக்கொடுத்தது யார்.....?

புதுப்பூக்களாய் சிரிக்கும் உங்கள்
பிஞ்சுகளுக்கு பூச்செண்டும்
மோட்டார் காரும் வாங்கிக்கொடுங்கள்....
விற்கப்படாமலே கிடக்கட்டும்
விளையாட்டு துப்பாக்கிகள்......!

சுவரிலோ ஆசனத்திலோ
குழந்தை மோதிவிட்டதா .....
மோதியது குழந்தை என சொல்லிக்கொடுங்கள்.....
அஃறிணைக்கு உயிர்கொடுக்காமல்.....

ஆனால்.....
நினைவுகள் பத்திரம்.......
மனங்களை விகாரமுறுத்தாத
மென்போதனைகளோடு.......
நீள்கனவுகளின் ஆழ்விதைப்பாய்
இருக்கட்டும்
நம் தலைமுறைகடக்கும் தகவல்கள்...

போரறியா தலைமுறையின்
புலர்வுக்குப்பின்னும்.....
நிறைந்தே கிடக்கின்றன
உறவுகள் தேடும் நம் கூடாரங்கள்.....

வழிமாறிய தலைமைகள்
கைகுலுக்கிக்கொள்கையிலும்
மூடியே கிடக்கின்றன
விசாரணையற்ற சிறைக்கூடங்கள்....

மறுபுறம்....
பெரிய பாம்பினால்
விழுங்கப்பட்ட பின்பு .....
பூச்சியத்திலிருந்து தாயமுருட்டி
ஏணிகள் விலத்தி
எண் எண்ணாய் நகரத்தலைப்படும்
முதிய வழிகாட்டிகள்......

ஏரிக்கரையில் உக்கிப்போகாமலே
மீட்கப்படுகிறது
பச்சை சீருடை........
இடைத்தலைமுறையின் நினைவுகளை போல .........

2018

## கார்த்திகை 26

செந்தமிழ் வாழ்த்திடும் கொடையாகினாய்
சிந்திய குருதியில் சிறையாகினாய்– உன்
முந்தையர் பாதையில் முடிவாகினாய்–பேர்
அந்தமில் ஈகையால் முதலாகினாய்..

வைகறை எண்ணி அறைகூவினாய் –நம்
வாசலில் வசந்தத்தை விலை பேசினாய்
வந்தது சேரமுன் இளைப்பாறினாய் –விடி
வானில் இருந்து நீ பூத்தூவுவாய்....

26.11.2017

# மழை

மெல்லப்பொழிகிறாய்.....,
மேதினியின் மேனியதில்
செல்லத்தழுவலுடன்...!
சென்றாண்டு எந்தச்
சிறையிருந்து நீ மீண்டாய்....?

கடுங்கோடை வெயில் காய்ந்து
களைப்பாகி ....
நெடுங்காலம் நீயின்றி
துரும்பாகி...
அருந்தாமல் இருந்தாள் உன்
புவிக்காதலி– பசலை
நெருப்பாகித்தகித்தாள் உன்
அடிச்சேவகி....

துளியாகி வீழ்ந்தாய் புவி
மடி மீதிலே... அவள்
நறுந்துகை தெளித்தாள்
அது மண் வாசமே.......!

துளியாய், தூறலாய்
தழுவிக்கிளர்வுற்று
பெருக்காய், பெருமழையாய்
பெருவலியாய் பிரவகித்தாய்........

தெருக்கள் குளிப்பாட்டி,
திண்ணைகளை தூய்தாக்கி,
மண்ணுக்குள் வடிவாய் ....
மலர்விப்பாய் இளவேனில்......

பல குளங்கள் நிறைப்பாய்,
பச்சையங்கள் புதுப்பிப்பாய்,
உலகுயிர்கள் வாழ
உவப்பாய் உணவளிப்பாய்.....

மெல்ல தழுவிடிலோ
வலியுணர்த்தாதுன் சேர்க்கை....
செல்லத்தழுவலுடன் சிந்திப்போ
அது போதும் .....
மெல்லப்பிரசவிக்கும் பூமி.....!!

2017

# மரணித்துப்போனவனின் முகநூல்....

காலங்கள் கடந்தும்
இடுகையிடப்படாத கணக்கிற்கு
நட்பு வேண்டுகை கொடுத்துப்போகின்றன்
புதுமுகங்கள்.....

கிராமத்து வீடுகளின்
கிடுகு வேலிக்கடவைகளூடு
நீளப்பயணிக்கும்
கால் நடை போல்
கணக்குகள் தாவிக்
கண்டுகொள்கிறாள்
தொடர்பு தொலைந்து போன பள்ளிக்காதலி........!
தெரிந்தும் சொல்லத்தயங்கும்
குறி சொல்பவன் போல
ஆதி சொல்லி, பாதை சொல்லி,
அந்தம் சொல்லாதிருக்கிறது காலக்கோடு......!!

நன்றி சொல்லப்படாமலே கிடக்கின்றன
நூற்றுக்கணக்கான
“அமைதியுள் உறைக”கள் ........!

மனங்களில் பதிவுறும் வாழ்வை
அறிவுறுத்துகின்றன
தொடர்ந்தும் விருப்பிடப்படாத பதிவுகள்.......!!

2017

# துயின்று எழும் தூயவர்கள்......!

கால நதி  கண் முன்
      கடந்து நகர்கையிலும்,உங்கள்
கனவு வெளி மட்டும்
      நீண்டு விரிகிறது............

சொல்லாயிரங்களிலும்
     சிக்காத ஈகையுடன்
பல்லாயிரங்களாய்
     புதையுண்டு போனவரே .......

விதைகளாய் முளைத்து
     விழுதெறிந்த செய்தியினைக்
கதைகளாய்க்  கேட்கும்
      கட்டிளமைச் சந்ததியாய்
மீள்பிறப்பின் கட்டியமோ.....
     ரயில் கடவை மீதொளிர்ந்த தீபம்.....?

2015

# விழாக்கால கொள்வனவு....

விழாக்காலத்து
விற்பனைத்தெரு ஒன்றில்......
விழிகளைக்கொடுத்து
இதயம் வாங்கிப்போனாள் ஒருத்தி...
விலைகள் ஏதும் கொடுக்காமல்.....!

செவ்வொளி சிந்தும்
கண்ணாடி ரோஜாக்கு
விலை கேக்கிறான் அவன்.......!

2015

# சரித்திரத்தில் சரிபாதி நீ....

நீ உன் வயிற்றில் தீ மூட்டினாய்...
தீவின் திசைகள் எங்கும் பற்றிக்கொண்டது,
அகிம்சை அக்கினி......!

கனன்ற தீயின் சூரிய ஒளியில்
களையிழந்து போயிற்று,
காந்தீய தீபம்....!

அகண்ட தேசத்தின்
இருண்ட குகைகளில் தெறித்த
உன் அகிம்சை ஒளியில் மின்னின,
நரிகளின் விழிகள்.....!

யுத்த யுகம் பேசும் நாளைய சரித்திரத்தில்,
மொத்தத்தில் சரி பாதி,
நீயும் உன் மார்க்கமும்....!!

மீதிக்குள் பதிவுறும்
போரும் போர் குற்றங்களும்......

2015

# துடுப்பிழந்த படகு!

நாங்கள் நதிகளை நடந்து கடந்தோம்
நட்சத்திரங்களை எண்ணிச்சிலிர்த்தோம்
நீண்டு விரிந்த தெருக்களின் மீது
நிலவொளியில் எம் பாதம் நனைத்தோம்...

எங்கள் கரங்களில் மானம் இருந்தது...
எங்கள் தோள்களில் பாரம் இருந்தது....

நட்ட நடுநிசி நேரத்தில் கூட
நங்கையர் தெருவினில் நடக்க முடிந்தது...
பட்டப்பகல் போல் இரவினில் கூட
பயமின்றி பல மைல் போக முடிந்தது....

கிட்டக்குரைக்கிற நாயொலி கேட்டு
துட்டர் என்றெண்ணும் இன்று போலன்றி
தீரர் என்றெண்ணி துணிந்து கண்ணை
மூடிக்கிடக்க முடிந்தது அந்நாள்........

எங்கள் சிரங்களில் மிடுக்கு இருந்தது
எங்கள் படகுக்கு துடுப்பு இருந்தது.....!

தாமே துணிந்தவர் இருக்கும் வரைக்கும்
தூய்மை இருந்தது, தானை வரைக்கும்!
துணிய வைத்தவர் துலங்க மறுக்க

தெருவில் கண்டவர் ஓடி ஒழிக்க்
பெருமை மாறி பிணியென உணர
மனதுகள் துணிந்தது கசக்கும் நிசம்தான்...!

அறுவடை மீது பங்கும் வேண்டும்
அடுத்தவன் மகனே அறுக்கவும் வேண்டும்
என்ற மன நிலை வந்ததன் பின்பும்
தன் பிடி தளர்த்தத் தயங்கியதாலோ.....
கால நீட்சி காலனாய் மாறும்
கொடுமை உணரத்தவறியதாலோ....
'ப்ரூடஸ்கள்' அருகினில் கூட இருக்க
அரசவை நடத்திச்சென்றதனாலோ....

எங்கள் படகு துடுப்பை இழந்தது...
அலைக்கும் கடலில் ஆடிக்கிடக்குது....!!

2013

# மகனுக்கு மயிலில்லை சிவனுக்கும் மானமில்லை...

மண் பிரிந்து பல ஊர்கள் அகதி என அலைந்து
கண்களதில் ஒளியிழந்து கட்டுடலும் தேய்ந்து
பெண்ணில்,மண் பொன்னில் நாட்டமிழந்தோய்ந்து
விண்ணுலகம் ஏகவேனக் காத்திருந்தார் விசுவர்....

அறமொன்றே கூடவரும் மற்றொன்று இல்லை
மறலி வரும் நேரத்தில் வரும் சுடலை ஞானம்
கறங்கு உடல் பிரிகின்ற கணமெண்ணி, தம்வாய்
திறந்து அவர் கிடக்கின்றார் இழுக்கிறது 'சேடம்'...!

இருந்தாலும் அவர் ஆவி பிரியாது போலும்
மருந்தேதும் திருத்தாமல் மனிதர் அவர் மனதுள்
பெருந்துயரொன்றுள்ளதென பேசுமொலிகேட்டு
முருகன் அவர் குலதெய்வம் அருகில் வரலானான்!

வரமொன்று கேளென்றான் ஈசனவன் மைந்தன்
கரம் கூப்பி கேட்கின்றார் கண்கள் நீர் உகுத்தார்
'தர வேண்டும் நான் உதித்த மண்ணிலேயே சாக'
சிரம் தாழ்ந்தான் முருகன் அவன் செய்வதறியாது...

முருகன் தன் கோவிலினை பார்க்கவென எண்ணி
தெருவழியாய் போனான் விசுவர் மண் நோக்கி,
அருகிவரும் மயிலினத்தால் வாகனமும் இன்றி!
திருப்பி அவர் விட்டிட்டார் முருகனையும் கூட...

தந்தையிடம் போனான் மயிலென்றான் மைந்தன்
சிந்தையிலே துயர் படிந்த ஈசன், மகன் நோக்கி
எந்துகிலே நானிழந்தேன் தோலில்லை உடுக்க்
மைந்தா நீ புலி தேடென் மானம் மீழ் என்றான்....

2013

# ‘‘ரஷ்யாவா சைனாவா’’

இளமாலை ஒளிசாயும் இரவுக்காலம்– இது
வளமான அணி ஒன்றின் பிரிவுக்காலம்
தளராது சளையாது பெரும்போராடி, கல்விக்
களம் ஒன்றின் கரை சேரும் கனவுக் காலம்..............

மொழியொன்று எழுகின்றது, வண்ணக்
கவியொன்று பொழிகின்றது........
விழியின்று துளிதூவத்தவிர்க்கின்ற போதும்
இவர் இதயங்கள் அழுகின்ற(ன)து.....!

அணியொன்று வழி கண்டது – இனி
அவரவர் விதி கொண்டது......,
அது வென்று திசை மாறி அகல்கின்ற போதும்
அகம் காக்க அகம் கொள்ளுமா .........?

இடர் வந்து தடம் இட்டது–அதை
இனிதாக இது வென்றது
இருபத்தி எட்டென்று பெயர் கூறி, பீடத்தில்
இணையற்று நடந்திட்டது...............

முப்பதை அணைத்திட்டது– அதன்
முதுகினில் தட்டி ஓடென்று சொல்லி
அருகினில் இது வந்தது.....!

முன்னேற வழி சொன்னது – நல்ல
முயற்சியில் தளரா முழுத்திறன் காட்டி
முதல்வனாய் அது நின்றது.....!

நிஜங்கள் நிலை மாறித்
தொலைவாகலாம்
நினைவுகள் மறைவாகுமா.....?

முதல் முதல் பீடத்தில்
கால் வைத்த முப்பதை
அணைத்திட்ட அணி அல்லவா...?

சிந்தனைக்குதிரைகள்
பின் நோக்கி விரைகையில்
சந்தித்த அற்றை நாள்
நினைவுகளில், ஈரம்
சற்றும் உலராமல்
பசுமை இருக்கிறது.....!

இருபத்தி எட்டும் முப்பதும்
ஒட்டிக்கொண்ட
அந்த இருபத்தியொரு நாள்கள்.....
இன்றும் தொடரும்
இழையறா நட்பின்
இனிய சாட்சிகளாய்.......,
பாசத்தீ பற்ற வைத்த
பசுமைப் பொழுதுகளாய்.......,
தங்கள்
பயனைப் பறை சாற்றி நிற்க...,
நம் இளையோரை எட்டாத
இனிய பொழுதுகளின்
கலக்கம்..,
காதுகளில் கேட்கிறது......,
குறைப்பிரசவ நட்புகளாய்......!

நம்மை அறியா அவர்கள்.....
அவர்களை அறியா நாம்....!

கட்டியம் சொல்வது என்ன தெரியுமா?
நாளைய விடுதிகளில் நம்
'உ .மூ' களின் காதுகளில்
கேட்டும் கேட்காமலும்
வெள்ளைக் கோட்டுகள்
கிசு கிசுக்கும்......
இந்த அண்ணா
''ரஷ்யாவா, சைனாவா....?''

ஒரு சின்ன வேண்டுகோள்.....

குடிசையின் கூரை துளையுண்டு
நிலம் எங்கும் மழையின் கோலம்..........
கூரையை சரி செய்வோமா,இல்லை
குடிசையையே அழிப்போமா.......??

2011

யாழ் மருத்துவபீடத்தின் இருபத்தி எட்டாம் அணி, பீடத்தை விட்டு விடை பெறும் நிகழ்வில் வாசிக்கப்பட்ட கவிதை.

## "வயதுக்கு வருதல்..?"

''அம்மா
எனக்கு
எப்போது
பதினெட்டு
வயதாகும்....?''

# இருப்பு...

எம்மை பொலிஸ்
பிடித்துப்போகும்...!
இன்றிரவோ—நாளை
விடியலிலோ
இது நடத்தல் கூடும்....!

பல் துலக்கிக்
காலைக்
கடன் கழியா முன் வந்து
பஸ் ஏற்றிப்போவர்,வலிந்து...!

கட்டாத காலி,
களையகற்றல் எனப்பகர்ந்து,
திட்டாத திட்டால்
திசைகள் சுழல,வசை
கொட்டாது கொட்டி
'கொட்டி' என கதை விடுவர்...!

தொட்டாலே மட்டும்
தொலையும், நம் உரிமை
முட்டாத மட்டும்
மீறுவதாய் அமையாது!

விட்டு விடு...—இனியும்
விட்டு பிடி...!

விசாரணை முடியும் வரை
‘கம்பிக் கணக்கை’
கணித்துக்கொள்....!

சந்தேகத்தின் பேரிலோ,
வந்திங்கு தங்கியதை
பொலிசில் பதியாத
காரணமோ
எதுவானாலும்
சில மணிகளேனும்
சிறை வாசம் கூடி வரும்..!

குற்றம் ஒன்றும்
தேவை இல்லை,
தமிழனாய் இருந்தால்—
சிறைக்குதகுதி
தானாய் வரும்...!

‘குடு’க் காரன் —கஞ்சா,
கசிப்பு கடத்தியவன்
கூட்டாளி என்பான் உன்னை...!
கூட்டுக்குள் மட்டும்
சமத்துவம் இருக்கும்—எதிர்
பேசாதே,—மானம்

போகுதென்று
கூசாதே...!
'இலது உளது ஆகாது,
உளது இலது ஆகாது
உள்ளதிலிருந்தே
உள்ளது தோன்றும்!'

கழுத்தெலும்பு
முறியும் வரை
காட்டு
மறு கன்னத்தை!

ஆடைகள் நீக்கி,
உடலில்
பயிற்சி அடையாளம்
பார்ப்பர்...!
'அம்மைப்பால்' குத்தாதே
தமிழா,– உன்
குழந்தைக்கு...!

கம்பிகளின் முன்னணியில்
உன்னை யாரும்
புகைப்படம் எடுக்கப்போவதில்லை..!
எடுத்தால்,
நாளை நீ
தேர்தலில் நிற்பாய்!
மக்களுக்காய்
சிறை சென்றதாய்
கதை அளப்பாய்...!

எம்மை பொலிஸ்
பிடித்துப் போகும்....!

நள்ளிரவில் கூட
இது நடக்கக்கூடும்...!

தலை நகரில்
உனக்கென்ன தொடுப்பு?
விடுதிகளில்
என்ன ஒரு தரிப்பு?
வெளியெறு
வேலையற்ற தமிழா...!
இல்லையேல்,
அதி காலைகளில்
வலிந்து ஏற்றப்படுவாய்!
அப்போது.....
நழுவி,
ஆற்றில் குதி...
கடலில் அது உன்னை சேர்க்கும்...

எதாவது கப்பல் வரும்
ஏறிக்கொள்...!

கரையேற
வேண்டுமென்றால்...,
கப்பல் ஓட்டத்தான் வேண்டுமாம்
ஒவ்வொரு தமிழனும்....!!

# சாவு நெருங்குதல்......!

அவர்களிடம்
பெரியதொரு பட்டியல்
இருக்கிறது....!

ஒருபுறமாக
தேய்வடைவதும்
மறு புறமாக
வளர்தலும்
கொள்ளும் விகிதங்கள்
ஒன்றையொன்று
விஞ்சுவதாய்..
'மேசைக்கு போதலும்
வெளியேறுதலுமான'
சந்த முறைகளின்
இடையே...
இயக்கமுறுகிறது
பட்டியல்.....

ஒவ்வோர்
கணக்காய்
முடித்துக்கொண்டு வருவர்....

பட்டியல் குறுகுவதில்
முனைப்பாய்...

நேர் நின்றெதிர்த்தோர்,
காட்டிக்கொடுத்தோர்,
மறுபுறம் சார்ந்தோர்,
பெரும் பழி செய்தோர்,

உடன்பட மறுத்தோர்,
எதிருரை செய்தோர்,
எழுத்தில் எதிர்த்தோர்,
தெரு வம்பளந்தோர்.......
எத்தனை என்பது
அவர் கணக்கறியார்...,
பட்டியல் தேய்வதே
பெரு முனைப்பாக.....

தட்டிச்சரித்து
தெருவினில் போடலும்
வெட்டி,
வெளியிடை
வீசி எறிதலும்
பற்றைகளிடையுடல்
பதுக்குதலோடு
பெரு வெளி மணலிடை
புதைத்தலும் நிகழும்...

பட்டியல் தேய்ந்து
குறுகி வருதலில்
குற்றமும் தீவிரம்
குறைந்தே சென்றது...

நேற்றோர்
தெருவினில்
நெற்றி நடுவினில்
ஏற்றிய சன்னம்
உள் சென்றசைந்து
ஈற்றினில் பிடரியால்
வெளிவந்திருக்க

மூளை சிதறி
முளி வெளியேறி
முற்ற வெளியிலோர்
முதியவர்கிடந்தார்...

சந்திக்கடையருக்
குந்திலிருந்து...,
சிந்தும் கடவாய்ச்
சாற்றை துடைத்து,
வெற்றிலை சப்பிய
விசை தலைக்கேறி....
ஒற்றை வார்த்தை
உமிழ்ந்தவர் கிழவர்....!

"அவங்களுக்கென்ன
அரசியல் தெரியும்..."

அடுத்த நாளே
அவர் போய் சேர்ந்தார்...!

பட்டியல் நகருது....
அடுத்த கட்டம்
எதுவெனத்தெரியுமா?

மரணம் நமது
அருகிலே உள்ளது....!

'சும்மா இருந்தோர்'
சுடப்படுதல்.....!!

இனியும் ஏன் தான்
சும்மா இருப்பான் நீ?

## மனிதம்.....

உன்னை
எவளோ ஒரு தாய்
பெற்றிருப்பாள்...

அவள்
யாரென அறிகிலேன்...

இந்தக்கணத்தில்
உன் செய்தி
அவளை
எட்டியிருக்கும்...

நீ
சிதறிப்போயிருக்கிறாய்...
நான்
முன்பு நடமாடிய
தெரு ஒன்றில்...!

இன்னும்
நினைவிருக்கிறது
எனக்கந்தச் சாவடி...!

சிலபோது அவர்கள்
எங்கள்பரீட்சைகளை
நிறுத்தினர்...
பல போது
பயணங்களில்
இறங்கி,
உருட்டச்சொல்லினர்
சைக்கிள்களை...

சாவடியின்
சற்று தொலைவிலிருந்து,
மாதிரிகள் பல
அனுப்பப்பட்டன...
சில
சகோதரிகளின்
உள்ளாடைகளோடு...
டீ.என்.ஏ சோதனைக்காய்...!

அதே தெருவில்
நீ இன்று....
சிதறிப்போயிருக்கிறாய்...

நீ
சிலுவைகள் சுமந்தது
பற்றியும்..
உன் கல்லறைகள்
கருவறைகள் ஆவது
பற்றியும்
இனி பேசப்படக்கூடும்....

அது வேறு கதை...

உன்னை
எவளோ ஒரு தாய்
பெற்றிருப்பாள்....

ஓ..!
நீ சிதற வைத்த
பண்டாரவையும்....!

## வேலிகள்...

நீண்ட
இடைவெளிக்கு பிறகு
நாங்கள் சந்தித்திருந்தோம்....

ஆரத்தழுவி
தோளில் கையிட்டபோது,
'அது' தட்டுப்பட்டது....

"நீ...."
என்றேன்...
"ஓம் நாங்கள்சேர்ந்திட்டம்"
அறுபது வயது
அப்பாவைச் சுட்டினான்...

நெஞ்சின்
நரைத்த மயிர்களுக்கிடையில்
'அது' தொங்கியது...

அவன்
அக்காவின் கழுத்திலும்...
இல்லை,
அது மஞ்சள் நூல்...!
‘அந்த’சின்னம்துலங்கியது...

தாலி பெண்ணுக்கு
வேலி என்பார்களே...?

‘ஆமாம்
களமும்
கணவனும்
தாண்டி அகல விடாத....’
ஓ...!
தேவைப்பட்டால்,
தேசத்திற்கும்.........!

மௌனித்தேன்...
அவன் இப்போது
உள்ளே இருக்கிறான்...!

# ‘காக்கை வன்னியர்...’

தெருவோரமாக
இருவர் ஆயுதங்களோடு....
முருகப்பன்
அருகில் வந்து
மெதுவாய் சொன்னான்...

“பின்னுக்கு
நாலைந்து பேர்
நிக்கினம்...
பெரும்பாலும்
பெட்டையள்....”

ஆபத்தை
உணர முன்பே
பிடிக்கப்பட்டு
திமிறத் திமிற.....

முருகப்பன்சிரிக்கிறான்...
ஏற்றிக்கொண்டு
வண்டிபுறப்பட்டது...

வாரிசுகள்....,
குரைத்துக்கொன்டுவெளிவந்தன...!!

முருகப்பன்
மூக்கை சுழித்தான்...!
‘இதுகள் இனி
வளரத்தான் போகுது...’!!!



தென்மராட்சியின் சாவகச்சேரி நகரில் 1985 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 30ஆம் திகதி பிறந்த வேலாயுதம் சாரங்கன் ஆரம்ப கல்வியை சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியிலும் இடைநிலைக் கல்வியை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியிலும் (1996 - 2004) கற்றார்.

மருத்துவபீடத்தின் 30 ஆவது அணி மாணவனாக யாழ்ப்பாணம் பல்கலைக் கலையில் இணைந்து கொண்ட சாரங்கன் தான் எழுதிவைத்த கவிதைகளைத் தொகுத்து மொழிபெயர்க்கப்பட்ட மௌனம் எனும் கவிதைத் தொகுப்பாக 2009ஆம் ஆண்டு வெளியிட்டார். 2013ம் ஆண்டு அனலைதீவு வைத்தியசாலையில் மருத்துவராக தன்னை இணைத்துக் கொண்ட சாரங்கன் 2015ஆம் ஆண்டு திருமண வாழ்க்கையிலும் இணைந்து கொண்டார். மருத்துவத்துறையில் பல்வேறு பரிணாமங்கள் ஊடாக தன்னை மிளிரச் செய்த சாரங்கன் தாயகம் எனும் வைத்திய நிலையத்தையும் நடாத்தி வந்தார்.

அவ்வப்போது கவிதைகள் எழுதி அவற்றினை சமூக வலைத்தளங்களில் வெளியிட்டு வந்த சாரங்கன் திடீரென ஏற்பட்ட நோயின் காரணமாக 2023 வைகாசி மாதம் 25 ஆம் திகதி இரவு 10.40 மணிக்கு இவ்வுலக வாழ்வை நீத்தார்.